# மும்மதம் போற்றும் நாகூரார்

*நல்லதை செய்தால் உன்னிடம் குறைகாண்பார்கள்*
*எது எப்படி இருப்பினும் நீ நல்லதைச் செய்*
*வெற்றி பெற்றால் உனக்கு எதிரிகள்*
*உருவாகுவார்கள்*
*எது எப்படி இருப்பினும் நீ நல்லதைச் செய்*
*இன்று செய்யும் நல்லது எல்லாம் நாளை*
*மறக்கப்படும்*
*எது எப்படி இருப்பினும் நீ நல்லதைச் செய்*
*தோல்வி என்பது முடிவல்ல*
*வெற்றி என்பது எளிதல்ல*
*முயற்சி என்பது முக்கியம்*
*வாழ்க்கை என்பது லட்சியம்*

**ஆக்கம்**


M.H.**ஹாஜா சம்சுதீன் சாஹிப்**
**(அ.பே. எண்-9443985250)**
M.A.**ஹைதர் அலீ** B.A., **காதிரி**



**ஷாஹெதாதா பதிப்பகம்**
**33, கலிபா சாயபு தெரு**
**நாகூர்-611002.**

**website :** www.sufisky.wordpress.com
**e-mail : ** sufissky@gmail.com

முதல்பதிப்பு - ஆகஸ்டு 2009,
உரிமை - ஆசிரியருக்கு,
நூல் பெயர் - மும்மதம் போற்றும் நாகூரார்,
பக்கம் - 34
ஆசிரியர் - எம். எச். ஹாஜா சம்சுதீன் சாஹிப்.

## சமர்ப்பணம்

மும்மதம் போற்றும் நாகூராரின் மருமகள் தாதா நாயகத்தின் இல்லத்தரசி மனம் குளிர்ந்த மாதரசி சுல்தான் பீபி உம்மு சாஹிபா அவர்களின் புனித ரூஹுக்கு

அச்சகம்

யுனைடட் பைன்ட் கிராஃபிக்ஸ்,
189, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,
மைலாப்பூர், சென்னை - 600 004,

# அறிமுகம்

தென்னகம் போற்றும் ஆன்மீக கோமான் ஹஜ்ரத் காதிர் ஒலி ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கூறும் பல நூல்கள் பல மொழிகளில் வெளிவந்துள்ளன.

நாள்தோறும் நாயகம் அவர்களின் தர்கா ஷரீஃபை தரிசிக்க வருவோரின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. மதபேதமில்லாமல் ஜியாரத்துக்கு வந்து போகும் அபிமானிகள் அறிந்து கொள்ளும் வகையில் ஆண்டகையின் தர்காவின் தோற்றம், அமைப்பு, அதில் உள்ள கட்டிடங்கள், அவற்றின் முக்கியத்துவம், அவை கட்டப்பட்ட காலம் ஆகிய குறிப்புகளுடன்,

ஆண்டகை அவர்கள் பயன்படுத்திய தொப்பிகள், தஸ்பீஹ் மணிகள், கிஸ்தி, ஆசாகோல், குர்ஆன் ஷரீஃப் ஆகிய கண்ணியத்துக்குரிய பொருள்களின் அரிய விவரங்களை உள்ளடக்கிய நூலாக மும்மதம் போற்றும் நாகூரார் என்ற பெயரில் இந்த சிறிய ஆனால் அற்புத நூலை பக்த கோடிகளுக்கு அறிமுகப்படுத்தி சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

M.H.ஹாஜாசம்சுத்தீனசாஹிப்

நாகூர்-15.8.2009 M.A.ஹைதர்அலீB.A.,காதிரி

டாக்டர் **வி.திவாகரன்,**
தாளாளர்/செயலாளர், மன்னார்குடி.

செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளை, 23.05.09.

மகளிர் கல்லூரி குழுமம்.

## நாகூர்

ஆண்டவனின் எல்லாம் வல்ல கருணையின் பேருருவாய் அமைந்த புண்ணிய திருத்தலம் நமது பெருமை மிகு திரு நாகூர். நாகூர் என்றாலே ‘‘ஆண்டவர் ஹமீத் நாயகம்‘‘ அவர்களை நினைத்து நமத இதயம் ஏதோ ஒரு இனம் புரியாத நிலையை பெறுகிறது. அது சந்தோசமோ! நம்பிக்கையோ, ஆதரவோ, கருணையோ, அன்போ அல்லது இவை எல்லாவற்றிர்க்கும் மேலான ஒன்றோ! என வியந்து இலயித்து மனதின் பாரம் நீங்கினாற் போன்று ஒரு நிம்மதியை ஏற்படுத்துகிறது. திருத்துறைப்பூண்டி நான் பிறந்த ஊர் என்பதால் சிறு பிராயத்திலிருந்தே நாகூர் ஆண்டவர் மீதும் அவர் உறையும் தர்கா ஆகியவற்றுடன் மிகுதியான பரிட்சயம் பாரம்பரியமாகவே மூதாதையர் காலம்தொட்டே இருந்து வருகிறது.

நான் சிறு பிள்ளையாக இருக்கும் போது எங்கள் குடும்பத்தினருக்கு உடல்நலம் குன்றினால் என் அம்மா விபூதியை எடுத்து நாகூர் ஆண்டவா என்று பூசிவிடுவார். உடனே நோய் பறந்தோடும். ‘‘நாகூரில் நடுநாயகமாக வீற்றிருந்து மக்களுக்கு அருள் வழங்கும் ஹமீத் நாயகம் மும்மதங்களுக்கும் சொந்தமானவர்‘‘. உலகின் எந்தவொரு இடத்திலும் (திருத்தலத்திலும்) காண முடியாத காட்சியாக அந்த கருணையின் இருப்பிடம் திகழ்கிறது. இந்து, இஸ்லாமியம், கிறிஸ்தவம் என்னும் பாகுபாடின்றி அனைவருக்கும் அருள் பாலிக்கும் திருத்தலமாக இருப்பதை பார்க்கும் பொழுது மதங்கள் வேறு வேறு ஆனாலும் மக்கள் அனைவரும் ஒன்றே என்ற எண்ணம் என் மனதில் எழுகிறது.

இப்பூவுலகம் தோன்றி சுமார் 5000 மில்லியன் ஆண்டுகள் ஆகின்றது. ஆதில் உயிரினம் தோன்றி சுமார் 3500 மில்லியன் ஆண்டுகள் ஆகின்றது இவையெல்லாம் அறிவியல் கோட்பாடுகள்.

வரலாறு மற்றும் இலக்கியங்களை படிக்கும்போது மருத்துவம் அதை சார்ந்த சித்தாந்தங்களெல்லாம் அரேபிய மொழிகளில் காணப்படுகிறது. எனவேதான் ‘‘நபிகள் நாயகம் ‘‘ போன்றே முகமதிய பெருமக்கள் அனைவரும் மருத்துவ சாஸ்திரங்களில் கை தேர்ந்தவர்களாக இருப்பது மட்டுமின்றி நோயாளிகளின் இன்னல்களை கலைவதில் பெரும் வெற்றி கண்டு மருத்துவம் மூலமாகவே மதக்கோட்பாடுகளை பரப்பினர். அத்தகைய பெருமைபெற்ற இஸ்லாமிய சமயத்தின் ‘‘நபிகள் நாயகத்தின்’’ மறுஉருவாக திகழ்பவர் நமது ‘‘ஷாகுல் ஹமீத் நாயகம் ‘‘.

மதங்கள் யாவுமே கடவுளை நெருங்கும் அல்லது அவனுடைய கருணை வட்டத்தில் நாம் சஞ்சரிக்க வழிகாட்டும் மார்க்கங்களைதான் சொல்கின்றன. குறிப்பாக இஸ்லாத்தில் மக்கள் எளிதாக வாழ்க்கையுடன் ஒன்றி மகிழ்ச்சியுடன் தவறாமல் கடைபிடிக்கும் கொள்கைகளும், கோட்பாடுகளும் நிறைந்துள்ளதால் உலகம் முழுவதும் இஸ்லாம் தழைத்து வருகிறது.

தேவாரத் திருமுறைகளிலும், நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற பக்தி பரவசமூட்டும் இலக்கியங்களும் இறைவனை புகழ்ந்து பாடுவதோடு மட்டுமின்றி, மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டும் கோட்பாடுகள் நிரம்பி இருக்கின்றது. திருஞானசம்பந்தர் தில்லை அம்பலமான நடராஜர் திருக்கோவிலுக்கு வந்தபோது அங்கே அருள் பாலிக்கும் ஐயனின் சேவகர்களை இறைவனின் ‘‘பிரதிநிதியாகவே கருதி தில்லை வாழ் அந்தணருக்கு அடிமையான் ‘‘ என்று பறைசாற்றி சொன்னார்.

அதுபோலவே “நாகூர் ஆண்டவரின் அற்புதங்கள்“ என்னும் இவ்வரிய பொக்கிசமான நூலின் மூலம் “ஹமீத் நாயகத்தின்” வரலாற்றை திறம்பட எழுதி எங்களை போன்றோர்க்கு நாகூர் மீதும், நாகூரார் மீதும் எங்கள் சிந்தனையை தட்டி எழுப்பிய இந்நூலின் ஆசிரியர் எல்லாம் வல்ல “ஹமீத் நாயகம்“ வழி வந்தவராகிய எம். எச். ஹாஜாசம்சுதீன்சாஹிபு அவர்களின் உறவு, தொடர்பு எங்களுக்கு மகத்தான ஒரு பாக்கியம். எனவே ஞான சம்பந்தன் சொன்னதுபோல் சம்சுதீன் சாஹிபுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் நானும் அடிமை என்று கூறி என்னுடைய எளிய இந்த உறையை அல்லாஹ்வின் காலடிகளில் சமர்ப்பித்து நாகூராரின் சந்ததியினர், இந்நூலை படித்தவர்கள், பார்த்தவர்கள் நாகூராரை நினைத்தவர்கள் என்று எல்லா மக்களும் சமாதான பெருவாழ்வு வாழவேண்டுமென்று வேண்டுகின்றேன்.

இவண்



(முனைவர். வி.திவாகரன்).



**Muhalli K. MOHAMED KALIFA SAHIB**
**(QUADIRI)**

(Herditary Dargah Kalifa, & First Trustee of Nagore Dargah)

**" MAHADOOM MANZIL "**

9, Thalaimattu Street, NAGORE SHARIFF-611 002.

(NAGAPATTINAM Dist S. India)

**Phone : 70034, STD : 04365**

Date :

## அணிந்துரை

நாகூர் ஆண்டவர்களைப் பற்றி அவர்களின் சரித்திரத்தை விவரித்து பல நூல்கள் வெளிவந்துள்ளன. நாகூர் நாயகம் நேசப்பாசறை தலைவர், சகோதரர் எம். எச். ஹாஜா சம்சுதீன் சாஹிபு அவர்களும், பன்னூல் ஆசிரியர் நண்பன், எம். ஏ. ஹைதர்அலீ சாகிபு அவர்களும் இணைந்து எழுதியுள்ள ''மும்மதம் போற்றும் நாகூரார்'' என்ற இந்த நூல் சற்று வித்தியாசமானது.

நாகூர் ஆண்டகை, அவர்களது அருமைப் புதல்வர் தாதா சாஹிபு நாயகம் அவர்களின் சரித்திரத்தையும் சுருக்கமாக புதிய கோணத்தில் வரைந்து, அத்துடன் அவ்விரு மகான்களின் ஆன்மீக உன்னதங்களையும் இந்நூல் வெளிப்படுத்துகிறது.

மேலும் தர்கா ஷரீஃப் மும்மத ஒருமைப்பாட்டு அடையாளங்களாக விளங்கும் குறிப்புகளையும், தர்கா கட்டிடங்கள் அமைந்த வரலாற்றையும், அவற்றின் அர்த்தத்தையும் சிறிய நூலில் தெளிவாக வெளிப்படுத்தி பக்தர் கோடிகளுக்கு பயன்படும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

தர்காபரம்பரைகலிபா&தர்காமேனேஜிங்டிரஸ்டி

K. Mohamed Kalifa Sahib
22.5.09

## அணிந்துரை

முக்கடல்-முத்தமிழ்-மும்மதங்கள் கூடுகின்ற இடம் நாகப்பட்டினம் மாவட்டம். நாகூரில் ஆண்டகை எஜமான் ஷாகுல் ஹமீத் அவர்கள். இவர்களது தர்காவிற்கு இஸ்லாமியர்கள் மட்டுமல்லாமல் அனைத்து மதத்தினரும் வருடம் முழுவதும் வந்து தரிசிக்கின்ற இடம். தெற்கில் கிருஸ்தவர்களுக்கு முக்கிய கோவில் உள்ள வேளாங்கண்ணி நகரம். இந்த கோவிலுக்கும் கிருஸ்தவர்களைத் தவிர ஏனைய மதத்தினரும் திரளாக சென்று வருகிறார்கள்.

நாகூர் ஆண்டவர்கள் அல்லாவின் திருப்பாதங்களை அடைவதற்கு முதல் நாள் தனது மகனாரை அழைத்திருந்தார்கள். தன்னை பல நாட்கள் கூப்பிடாத தந்தை இன்று கூப்பிடுகிறார் என்றதுமே குறிப்பால் உணர்ந்து கண்களில் கண்ணீர் மல்க தந்தையை சந்தித்திருக்கிறார்கள் தாதா சாஹிபு நாயகம் அவர்கள். "தான் அடக்கம் செய்யப்பட்டவுடன் மூன்றாவது நாள் சமாதியிலிருந்து கை மட்டும் வெளியே தெரிந்தால் நீங்கள் அனைவரும் நாகூரிலேயே தங்கிவிடுங்கள், அப்படி தெரியாவிட்டால் நீங்கள் வெளியூருக்கு சென்று விடலாம்" என்று நாயகம் ஆணையிட்டதாக நான் படித்திருக்கிறேன். எஜமான் அவர்கள் ஆணையின்படி நாகூரிலேயே தங்கி மக்களுக்கெல்லாம் அருள் புரிந்து வருகிறார்கள்.

மதிப்பிற்குரிய திரு எம்.எச். ஹாஜாசம்சுதீன் சாஹிபு அவர்களும் பண்ணூல் ஆசிரியர் நண்பன் எம்.ஏ. ஹைதர்அலீசாஹிபு அவர்களும் இணைந்து எழுதியுள்ள "மும்மதம் போற்றும் நாகூரார்" நூல் சிறப்படைய எங்களது வாழ்த்துக்கள்.

சிக்கல் ஸ்ரீ சிங்காரவேலவர் ஆலய

முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவர

இன்ஜினியர் V. கந்தவேலு A.I.IA.,

டெம்பிள்டிரீ பங்களா, சிக்கவலம், சிக்கல் -611 108 போன்: 04366-75437 & 75303

**Shrine Basilica of Our Lady of Health**
VAILANKANNI - 611 111
NAGAPATTINAM DIST. TAMIL NADU, INDIA.
E-mail: vlkshrine@rediffmail.com

Code 04365
Rector 263530
Shrine 263423
263584
264890
Fax 263625

**Dated : ——————**

## <u>வாழ்த்துரை</u>

***ஆன்மீக தலங்களுக்கு பெயர்போன இடம் தமிழ்நாடு. வாழ்வின் எல்லா சூழலிலும் ஆன்மீகத்தை தேடக்கூடியவர்கள் நாம். ஆன்மீகமும், சமூகமும் இரண்டற கலந்ததுதான் நம்முடைய பண்பாடு. அதனால்தான் நாம் வாழுகின்ற பகுதிகளில் கோயில்களை ஏற்படுத்தி கொண்டோம். இத்தகைய ஆன்மீக தலங்களுள், இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்து இறைவனின் அடியார்கள் நினைவாக அவர்களை போற்றி, வணங்கி ஆலயம் எழுப்பி கடவுளை மகிமைப்படுத்துகின்ற நடைமுறையும் நம்மிடையே இருக்கின்றது. அத்தகைய வகையில் ஹஜ்ரத் அப்துல் காதிர் ஷாகுல் ஹமீத் பாதுஷா நாயகம் என்ற இறையடியாருக்காக எழுப்பப்பட்டதுதான் நாகூர் தர்கா. இந்த நாகூர் தர்காவைப் பற்றியும், அப்பெயருக்குள்ள ஆன்மீக விளக்கங்களையும், இறையடியார் ஷாகுல் ஹமீத் அவர்களின் வாழ்வைப் பற்றியும், இறைவனுக்காக தன்னை எவ்வாறு அர்ப்பணித்து வாழ்ந்தார் என்பதை பற்றியும் இந்நூல் அழகாக எடுத்துரைக்கிறது. இந்நூல் மிகச்சிறந்த ஆன்மீக நூலாகவும், தூய உள்ளத்தோடு இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ நம்மை தூண்டுகின்ற ஒன்றாகவும் இருக்கின்றது என்றால் அது மிகையல்ல. இந்நூலை எழுதி, தயாரித்து, வெளியிடுகின்ற அனைவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகின்றேன். இதுபோன்ற முயற்சிகள் தொடர செபிக்கின்றேன்.***

***28.5.09*** ***கிறிஸ்துவில் அன்புள்ள***

P. Xavier

***திருத்தலப்பேராலயம்***

***வேளாங்கண்ணி*** ***(பேரருள்.திரு.பா.சேவியர்அடிகள்).***

***அதிபர்.***

***நலமோங்கும் நந்நாகூர் :***

நாகூர்: இந்த மூன்றெழுத்து தமிழ் உச்சரிப்பை அருள் மறை ஃபுர்கானின் மூலமொழியாகிய அரபு மொழியிலே எழுதும்போது நூன் அலிஃப் ஹேவாவ்ரே என்று ஐந்தெழுத்துக்களாக பொலிவுறும் அந்த ஐந்தெழுத்துக்களில் மறைந்திருக்கிறது மாபெரும் அற்புதம்.

நூன் என்பது ஐன் என்கின்ற மனிதனின் கண்ணை குறிப்பிடும். அலிஃப் என்பது மனிதனின் கண்ணுக்குள் தோன்றும் பிரபஞ்ச ஜோதியாகிய அல்லாஹ்வின் ஒளியை சுட்டிக் காட்டும். ஹே வாவ் ரே மூன்றெழுத்தை கூட்டினால் ஹூர் என்கின்ற சொர்க்க லோக தேவ கன்னியராகிய பேரழகிகளை குறிப்பிடும்.

ஹூர் என்பதை ரே வாவ் ஹே என்று திருப்பி வாசித்தாலோ ரூஹ் ஆகிய மனிதனின் ஆன்மாவை குறிப்பிடும். ரே வாவ் ஹே அலிஃப் நூன் என்று ஐந்தெழுத்துக்களையும் இடம் வலமாக மாற்றினாலோ ரூஹான், அதாவது ஐம்புலன் உணர்ச்சிகளால் ஆடும் மனித உடலெனும் விலங்கு ஆகிய பூத உயிரை சுட்டும்.

***இகலோக பரலோகம்:***

“நாகூர்” என்ற அந்த ஒரு சொல்லில் ஐயறிவாகிய விலங்கு, பகுத்தறியும் ஆறாவது அறிவின் தலமான ஆன்மா, ஆன்மா நின்றாடும் கண் அந்த கண்ணில் தெரியும் அல்லாஹ் ஆகிய பரம்பொருள் என்னும் ஜோதி, இகலோக விலங்கு, பரலோக தேவகன்னிகை இவை அனைத்தும் குடி கொண்டிருப்பதை அறிந்துணர்ந்தால் எந்த ஒரு மனிதனும் “நாகூர் ஆண்டவர்” யாரென்பதை புரிந்து கொள்ள முடியும்.

எல்லாமே நாகூரிலே அடக்கமா என்று கேட்டால் ஆம் அலிஃப் நூன் ‘அன’ என்கின்ற உன் அகம்பாவத்தை விட்டுவிட்டு, உன் நா என்கின்ற நாவை மூடிக்கொண்டு நாகூரில் உட்கார்ந்தால் உனக்கு சொர்க்கவாசம் சித்திக்கும். ஹூர்களாகிய தேவ கன்னிகைகளோடு இம்மையிலும் மறுமையிலும் நீ நிம்மதியாக வாழலாம் என்பது தான் “நாகூர்” என்ற சொல்லின் முழுமையானப் பொருள்.

அகில இந்தியாவிலும் அமைந்த ஆன்மீக கோமான்களின் அடக்கத்தலங்களிலே தழைத்தோங்கி நிற்கும் ஆலயங்களில் ஒன்றுதான் நாகூரின் தர்கா ஷரீஃப். அந்த நாகூரின் பெயருக்கும் புகழுக்கும் காரணமான தர்கா ஷரீஃபில் அடங்கியிலங்கும் நாகூர் ஆண்டவரின் முழுப்பெயர் ஹஜ்ரத் அப்துல் காதிர் ஷாகுல் ஹமீத் பாதுஷா நாயகம் என்பதாகும்.

***ஐந்து மனோரா :***

பரந்து விரிந்த நிலப்பரப்பில் வானோங்கி நிற்கும் ஐந்து மனோராக்களுடனும், ஆண்டகையின் மண்ணறைக்கு மேலான பொற்கவச மண்டபத்துடனும் காட்சியளிக்கும் தர்கா ஷரீஃப், இந்துக்கள் முஸ்லிம்கள் கிறிஸ்துவர்கள் ஆகிய மும்மதத்தினரின் ஆன்மாக்களும் சார்ந்து நின்று சாந்தியடையும் ஆன்ம சரணாலயமாகும்.

***மஸ்தான் சாகிபு :***

மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் குறிப்பிடும் ஐந்து மனோராக்கள், அந்த பஞ்சபூதத்தால் அமைந்த பிரபஞ்சத்தை ஆட்சிபுரியும் மக்ஃபரா என்னும் மண்டபத்தின்

உள்ளிருக்கும் ஆன்மீக ஜோதியை தரிசித்த பிரமிப்பில்தான் குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா முன்னூறு ஆண்டுகளுக்கு முன் கைகட்டி நின்று பாடியுள்ளார்கள்:

“திக்கு திகந்தமும் கொண்டாடியே வந்து
தீன்கூறி நிற்பர் கோடி
சிங்காச னாதிபர் நஜரேந் தியேவந்து
ஜெயஜெயா என்பர் கோடி
ஹக்கனருள் பெற்ற பெரியோர்கள் ஒலிமார்கள்
அணைந்தருகு நிற்பர் கோடி
அஞ்ஞான வேரறுத்திட்ட மெய்ஞ் ஞானியர்
அணி அணியாய் நிற்பர்கோடி
மக்க நகராளும் முகம்மதிரசூல் தந்த
மன்னரே என்பர் கோடி
வசனித்து நிற்கவே கொலுவீற் றிருக்குமுன்
மகிமை சொல்ல வாயுமுண்டோ
தக்க பெரியோன் அருள்தங்கியே நிற்கின்ற
தவராஜ செம் மேருவே
தயவுவைத் தெம்மையாள் சற்குணங் குடிகொண்ட
ஷாகுல் ஹமீ தரசரே !”

இந்த ஆன்மீக கோமானின் வாசலுக்கு கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில் வந்து நின்ற மாமன்னர் அவுரங்கசீப்பின் தமிழக ஆளுநர்,

ஷரியத்தின் புலி என்று வர்ணிக்கப்படும் கீழக்கரை கண்ட கீர்த்திமிக்க மெய்ஞ்ஞானி ஹஜ்ரத் சதக்கத்துல்லா ஒலி நாயகரோ:

"யாசையிதி ஷைகி வசத்ரஸ் ஸாதிரி
கன்ஜூல் உலூமி வரம்ஜ இல்மின் நாதிரி
மர்ளிய மவுலா ஹூல் கரீமில் காதிரி
யா செய்யிதஸ் ஸாதாத்தி அப்துல் காதிரி !
எனது தலைவரே குருவானவரே ! பிரபஞ்சத்தை
ஆளும் மெய்ஞ்ஞான விஞ்ஞான புள்ளி
கணக்கின் உள்ளார்ந்த ஒளியறினவினை
நுட்பங்களை எனக்கு கற்றுத் தருவீர்களாக!"
என்று கையேந்தி நின்றார்கள்.

**எட்வின் அர்னால்டு :**

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில், ஆசியாவின் பல்வேறு திசைகளிலும் வரலாற்றுப் பயணியாக உலாவந்த எட்வின் அர்னால்டு என்னும் பேரறிஞர் இருநூறு ஆண்டுகளுக்கு முன் நாகூர் வந்தடைந்து அவதானித்து,

***"The Saint of Nagore Shahul Hamidh is the Divine Light of South East Asia"***

நாகூரில் குடிகொண்டிருக்கும் ஆன்மீகக் கோமான் ஷாகுல் ஹமீது ஒலி நாயகம் தென்கிழக்காசியாவின் தெய்விக ஜோதியாவார்கள்!"என்று புகழ்ந்துரைத்து தன் வரலாற்று குறிப்பில் எழுதி எஜமான் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகத்தின் பாதங்களை அலங்கரித்தார்.

தர்காவை அலங்கரித்து நிற்கும் மனோராக்களின் உச்சிமீது பறக்கும் நெடுங்கொடிகள் காற்றிலாடி படபடக்கின்றன. “லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்” - இல்லை வேறிறைவன் ஏகன் அல்லாஹ்வையன்றி அண்ணல் முஹம்மத் (ஸல்) அவன் திருத்தூதர்” என்ற சொற்தொடர் பெரிய மனோராவின் மீது பறக்கும் தூய வெண் கொடியின் மீது பொறிக்கப்பட்டிருக்கிறது.

இரயில் நிலையத்திலிருந்தும், பேருந்து நிலையத்திலிருந்தும் கந்தூரி நாட்களில் இறங்கி வரும் ஆயிரக்கணக்கான புனிதப் பயணிகளில் இஸ்லாமியரும், இந்துக்களும், கிறித்தவர்களும் கலந்திருக்கிறார்கள்.

“ஆண்டவரே ! நாகூராரே !” என்று அவர்கள் இதயம் உருகும் குரலை செவிமடுத்துப் புளகித்ததுப் போல மனோராக்களின் மாடங்களிலிருந்து மணிப்புறாக்கள் திடீர் திடீரெனப் பறக்கின்றன.

அதிகாலைப் போதிலும், அந்தி மாலையிலும் எழுப்பப்படும் நகராக்களின் இன்னிசை முகலாயர் காலத்து அரசவைகளை நினைவூட்டுகிறது. மணிக்கு ஒரு முறை அதிரும் வெடியோசை காலகதியை நிர்ணயிக்கும் சக்தி அங்கே குடிகொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்துகிறது.

கூட்டத்தோடு கூட்டமாய் அலங்கார வாசலில் நுழைந்து அரண்மனைப் போன்ற தர்காவின் உள்முற்றத்தையடைந்ததும், எதிரில் தெரிகிறது புனிதப் பயணிகளின் இலட்சியப் பீடமாம் ஆண்டகையின் அடக்கத்தலம்.

வளாகத்தில் முன்னதாகவே தெரிகிறது, ஆண்டகையின் ஆத்தும குமாரர் அண்ணல் ஷாஹெ தௌலலத் சையிது முகம்மது யூசுப் சாகிப் ஆண்டகை (ரலி)யின் வாசல், அடுத்திருப்பது ஆத்துமக் குமாரரின் துணைவியார் சையிதா சுல்தான் பீவி அம்மா (ரலி)யின் புனித வாசல்.

மணி மண்டபத்தைப் போல் இலங்கும் நடுமண்டபத்தை அடைகிறோம். அடுத்தடுத்து தெரியும் ஏழு ஒளி வாசல்களை தாண்டி உள்ளின் உள்ளே இலங்குகிறது ஆண்டகையின் மஃஜார் என்னும் புனித சமாதி.

உள்ளமும், உடலும் புள்ளரிக்கிறது. யுகயுகாந்திரமாய் தாகித்திருந்த ஆத்மா தாக சாந்தி பெறும் பேருணர்வு, அதைத் தொடர்ந்து பேரானந்தக் கண்ணீர் பக்தர்களின் கண்களிலிருந்து தளும்புகிறது.

## அயோத்திக்கு சமீபம் :

நாலாபுறமும் விஸ்தீரனமான முற்றங்கள், பெரும்பாலும் சதுரங்கமாய் அமைந்த பல மண்டபங்கள், நான்கு திக்கிலும் பாங்கொலி எழுப்பப்படும் பள்ளிவாசல்கள், இத்தனைக்கும் நடுவில் இலங்கும் மக்ஃபரா என்னும் அடக்கத்தலம். அண்ணல் சையித் அப்து காதிர் ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகம் (ரலி) நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வடநாட்டில் இதிகாசங்கள் புகழும் அயோத்திக்கு அருகில், புத்தபிரான் ஞானோதயம் பெற்ற கயைக்குச் சமீபத்தில், இந்துக்களின் புனித ஸ்தலமான வாரணாசிக்கு அண்மையில், புனித இஸ்லாத்தின்

வளர்பிறையாக அவ்லாதுல் அத்ஹார் (பரிசுத்த சந்ததிகள்) என்னும் தூய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குலத்தில் பிறந்தார்கள்.

அக்காலை இந்துகுஷ் மலையின் கணவாய்களின் வழியாக முகலாய வீரர் பாபர் இந்தியாவிற்குள் நுழைந்து வர திட்டமிட்டுக் கொண்டிருந்தார். நாலா திசைகளிலும் கபீர்தாசரும், அவரது சீடர்களும் சமய சௌஜன்ய கீதங்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

## குருநாதர் குவாலீரி:

அண்ணல் வளர்ந்து பதினாறு வயது நிறைந்து, அறிவைத் தேடி அக்காலத்தில் கல்விக்கும், கலாச்சாரத்திற்கும் கலங்கரை விளக்கம் போல் விளங்கிய குவாலியர் (மத்தியப் பிரதேசம்) நகரை அடைந்து மகான் முகம்மது கவுது குவாலிரி (ரலி) அவர்களின் சீடர்களிலானார்கள்.

மக்களாலும் மன்னர்களாலும் மெத்த மரியாதையோடு பேசப்பட்டவர்களும், அக்காலத்தில் வாழ்ந்த ஞான குருமார்களிலெல்லாம் சிறப்பானவர்களும், கருணை, இரக்கம், தயாளம் முதலிய நற்குணங்களின் தாயகமாய் விளங்கியவர்களும், சமய சகவாழ்வின் சிறந்த இலக்கணமாய் திகழ்ந்தவர்களும்,

இஸ்லாத்தின் ஒப்புயர்வற்ற ஷரீயத், தரீகத், ஹக்கீகத், மஃரிபத் ஆகிய ஞானங்களில் கரை கண்டவர்களும், இந்து மத வேதங்களையும் புத்த, ஜைன தத்துவங்களையும் யூத, கிறித்தவ ஞானங்களையும் ஆராய்ந்தறிந்தவர்களும், அரபி, பார்ஸி மட்டுமின்றி சமஸ்கிருதத்திலும் வளமான மொழியறிவைப் பெற்றிருந்தவர்களும்,சிறந்த பல மார்க்க நூல்களையும், அகமிய பனுவல்களையும் எழுதி, முத்தியியலையும்,

சித்தியியலையும், மாணவர்களுக்கு கற்பித்து வந்தவர்களும், பால் வளம் பெருக்கி, சுயஜீவனம் நடத்தியவர்களும், கலையுலகம் போற்றிய மேதையும், சகலகலாஞானியும், இறைநேசர்களின் வரிசையில் ஏற்றம் பெற்றவர்களுமான சூஃபி மகான் அண்ணல் முகம்மது கவுது (ரலி) அவர்களிடம் சீடரான நாகூரார் பத்தாண்டு காலம் பயிற்சி பெற்றார்கள்.

## இரண்டாவது ஈஸா:

அறிவுலகம் போற்ற வாழ்ந்த அந்த மாமேதை தம் சீடர் ஷாஹுல் ஹமீது அவர்களிடம் கொண்டிருந்த அன்பிற்கும் மதிப்பிற்கும் அளவேயில்லை. கல்வி புகட்டி தான் தேடியடைந்து சேமித்த கலைகளையெல்லாம் பயிற்றுவித்தார்கள். 63 அழகிய திருநாமங்களை தன் சீடருக்கு சூடி மகிழ்ந்த குருநாதர் சீடரின் இரக்கமுள்ள இதயத்தை உணர்த்த இரண்டாவது ஈஸா என்று அவர்களை அழைத்தார்கள்

தான் பெற்றிருந்த பதினான்கு கிலாபத்துகளின் (ஞானப் பிரிவுகள்) பரிவட்டங்களையும், அருமை சீடரின் சிரசின் மீது சூடி மகிழ்ந்தார்கள். தன்னிடம் பயின்று வந்த நானூற்று நான்கு மாணவர்களையும் தன் சீடரின் சீடர்களாக்கி உலகெங்கும் சென்று மார்க்கத்தையும் ஏகத்துவ ஞானத்தையும் பரப்புமாறு ஏவினார்கள்.

## *உலகலாவிய உலா:*

அண்ணல் அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது அவர்கள் இந்தியத் துணைக்கண்டத்தை நானூற்று நான்கு சீடர்கள் பின் தொடர வலம் வந்தார்கள். துங்கபத்ரா நதிக்கரையில் அமைந்த விஜயநகர

சாம்ராஜ்யத்தில் நுழைந்து அம்மன்னர்கள் இஸ்லாத்தின் மீதுகொண்டிருந்த வெறுப்பை மாற்றினார்கள்.

பாமினி சுல்தானியங்களில் ஷியா சித்தாந்தத்தை தடுத்து சுன்னத்வல்ஜமாஅத் கொள்கையை நிலை நிறுத்தினார்கள். ஆப்கானி லும் பாரசீகத்திலும் முரட்டு காபூலிகளையும், நெருப்பை வணங்கும் ஃபார்ஸிகளையும் பண்படுத்தி இஸ்லாத்தை ஏற்கச் செய்தார்கள்.

## *துருக்கியில் வரவேற்பு :*

பத்தாண்டு காலம் அரபகத்தில் தங்கி ஒன்பது முறை மக்காவில் ஹஜ்ஜு செய்ததுடன், மதினாவிலும், கர்பலாவிலும், பாக்தாதிலும் புகுந்து ஆன்மீக பரிபூரணமடைந்தார்கள். மாமன்னர் சுல்தான் சுலைமானால் கான்ஸ்டாண்டி நோபிளிலுள்ள ஆயா சோஃபியா என்னும் பள்ளிவாசலில் வரவேற்று கௌரவிக்கப்பட்டார்கள்.

## கோவாவின் கவர்னர் :

அரபிக்கடல் வழியே தாயகம் மீண்டபோது, மதீனாவில் மாநபியின் அடக்கத்தலத்திலிருந்து அவர்களின் புனித உடலை திருடிச் செல்வதாகச் சூளுரைத்தவரும், இந்தியாவில் மேலைக் காலனி ஆதிக்கத்திற்கு கால்கோளிட்டவருமான கோவாவின் போர்ச்சுகல் கவர்னர் அல்போன்சோ அல்புகர்க்கை கடற்போரில் அழித்தார்கள். கொச்சிக்கு தெற்கிலுள்ள பொன்னானியில் கலமிரங்கி முகல்லத் தீவுக்கும், ஸ்ரீலங்காவுக்கும் சென்றுவிட்டுக் காயல்பட்டினத்தில் கரையிறங்கித் தமிழகத்தின் நாலா திக்கிலும் வலம் வந்தார்கள்.

முதல் தமிழ்முனிவர் அகத்தியர் வாழ்ந்ததாகக் கருதப்படும் பொதிகை மலை மீது உலவி, திருச்சியில் இறைநேசர் தப்லே ஆலம் பாதுஷாவின் தர்பாரைத் தரிசித்து, தஞ்சைப் பகுதியில் நாயக்க மன்னரின் வாதநோயைத் தீர்த்தார்கள். திருவாரூர் தியாகராசரின் தேரை வடமின்றி உருட்டி ஓட்டினார்கள்.

நாகூரில் இருபத்தெட்டு ஆண்டுகாலம் தங்கி ஏழைப்பாழைகளின் இன்னல்கள் தீர்த்து இஸ்லாத்தை தாமே பலர் முன்வந்து ஏற்கக் காரணமாய் அமைந்தார்கள். அறுபத்தெட்டு ஆண்டுகாலம் அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த நாளெல்லாம் ஏதேனும் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டேயிருந்தன. அவர்களின் துஆவால் (பிரார்த்தனையால்) உடற்பிணிகள் தீர்ந்தன, மனப்பிணியாளர் குணப்பட்டனர், மாண்டவர் சிலர் மீண்டனர். கவிழவிருந்த கப்பல்கள் காப்பாற்றப்பட்டன. இன்னும் பலவித இன்னல்கள் நீங்கின,

## அக்பரின் பொற்காலம் :

அண்ணல் வாழ்ந்த காலத்தில்தான் பேரரசர் அக்பரின் பொற்காலம் ஆரம்பமாகியது. வடபுலத்தில் துளசிதாசர் துளசி ராமாயணத்தைப் பாடினார். இராஜபுதனத்தில் கிருஷ்ணபக்தை மீராவின் பஜன்கள் ஒலித்துக் கொண்டிருந்தது. புனித சவேரியர் (Saint Xavier) கிறிஸ்துவ மதத்தை பரப்புவதற்காக தென்னகத்தைச் சுற்றி வந்தார். ஞானிகளும், யோகிகளும் நிறைந்த அக்காலத்தில் அண்ணல் சுடர்விடும் நட்சத்திரமாய் விளங்கி இலங்கினார்கள்.

அவர்கள் வாழ்ந்த காலத்திலும், வாழ்நாளுக்குப் பிறகு, அவர்கள் அடக்கமான புனித இடத்திலும் நடைபெறும் விவரிக்க வொண்ணாத அற்புதங்களுக்கெல்லாம் இஸ்லாத்தின் ஞானப் பாட்டைகளான பதினான்கு கான்வாதக்களும் (மரபுகளும்) ஆண்டகை அவர்களிடம் ஒன்று சேர்க்கப்பட்டிருந்ததை குறிப்பிட வேண்டும்.

வெளிப்படையாக அற்புதக் காரணம் விளைவித்த இறை நாயர்களில் ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்கள் முத்திரையானவர்கள் பதினான்கு கான்வாதக்களான ஞானப் பாதைகளும் ஐம்பத்தொரு தரீக்குகளான ஞானப்பாட்டைகளும் ஒன்றுக்கூடும் தலமாக விளங்குவதால் அகமிய ஞானப் பாதைகளில் தடுமாறுவோர்க்கு அவர்களது தர்கா கடைசிப் புகலிடமாகக் கருதப்படுகிறது.

***ஈன்றெடுத்த நன்மக்கள் :***

அண்ணல் சையிது அப்துல் காதிர் பாதுஷா நாயகம் அவர்களின் மைந்தர் ஸையிது முகமது யூசுபு சாகிபு அவர்களும், அன்னாரின் துணைவியார் மாதரசி சுல்தான்பீவி அவர்களும் ஈன்றெடுத்த ஆறு ஆண்மக்களும், இரண்டு பெண்மக்களும் பெற்ற சந்ததிகளே இன்று நாகூரில் வாழும் சாஹிபுகள் என்று அறியப்படும் அண்ணலர் நாகூராரின் சந்ததியாவார்கள்.

சையது முகம்மது யூசுபு சாஹிபு நாயகமவர்களின் ஆறு மைந்தர்கள் பாபா பஹ்ருத்தீன், ஹமீதுல் ஆஷிகீன், சுல்தான் கபீரி, சுல்தான் ஹக்கானி, நூருத்தீன் காமில் மற்றும் சுல்தான் ஸஃகீர் ஆகியோராவர். நாயமவர்களின் இரண்டு பெண்மக்கள்

பீபீஜுகரா, பீபீபாத்திமா ஆகியோராகும். இந்த எண்மரின் சந்ததிகளே இன்றளவும் நிர்வாக சபையின் எட்டு உறுப்பினர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

எண்ணற்ற மக்களின் இன்னல்கள் அண்ணலின் சந்ததியினரான சாஹிபுமார்கள், சாஹிபம்மாக்கள் காணிக்கையேற்று கரமேந்துவதால் தீர்ந்து வருகின்றன. அண்ணலின் சந்ததிகளில் தோன்றும் அகமிய ஞானகுருமார்களின் வரிசையோ வலிமையோ சொல்லுதற்கரியது.

***வானளாவிய மனோராக்கள் :***

நாயகமவர்கள் சில்லாவிருந்த கடற்கரை சில்லாடிக்கு வந்து நிற்கிறோம். திரும்பி நோக்க தூரத்தில் உயர்ந்த மனோரா இன்னமும் கம்பீரமாகத் தெரிகிறது. இந்த மனோரா இந்து மன்னர் பிரதாப்சிங் கட்டுவித்த காணிக்கையென்று அறிகையில் உள்ளம் வியப்பில் ஆழ்கிறது. நாகூர் ஆண்டவர்கள் காலகதியடைந்து நூற்றைம்பது வருடங்களுக்கு பின்னர் தஞ்சையை ஆட்சி புரிந்த மராட்டிய மன்னர் பிரதாப்சிங் பிள்ளைவரம் கேட்டு நாகூர் தர்பாரிலே வந்து நின்றார். அடுத்த வருடமே அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

மன்னரால் 131 அடி உயரத்தில் வானுயரக்கட்டப்பட்ட மனோரா பெரிய மனோரா என்று அழைக்கப்படுகிறது. தன் மைந்தன் துளசியுடன் நாகூர் போந்த பிரதாப்சிங், ஆண்டவர்களை வணங்கி வழிப்பட்டு தர்கா பரிபாலன காரியங்களுக்காக கடம்பனூர் என்னும் கிராமத்தை மானியமாக வழங்கினார்.

தர்கா வளாகத்தின் தென்மேற்கில் அமைந்திருக்கும் சாகிபு மனோரா ஆண்டவர்களின் பேரரும் சின்ன எஜமான் சையத் யூசுபு நாயகத்தின் மூன்றாவது மைந்தருமான சுல்தான் கபீர் நாயகத்தின் காலத்திலேயே கட்டப்பட்டதாகும்.

செஞ்சியில் வாழ்ந்த புகழ்மிக்க வர்த்தகர் இபுறாகிம்கான் என்பவர் தன் நேர்ச்சை நிறைவேறியதின் காரணமாக இதனை கட்டுவித்தார். அவரது காரியதரிசிகளாக மீறான் ராவுத்தர், மதாறு ராவுத்தர் என்ற இரு பெருமக்கள் முன்னின்று இந்த முதல் மனோராவை உருவாக்கினர்.

நாகை நல்ல சயீது மரைக்காயர் என்ற மலாக்காவாழ் வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதி வியாபாரி, ஆண்டவர்கள் மறைந்த 132ம் வருடம், முதுபக் மனோராவை எழுப்பினார். இதனை முன்னின்று கட்டி முடித்தவர் பீர்நயினார் மரைக்கார் என்பவராவர்.

நான்காவது மனோராவாகிய ஓட்டு மனோரா பரங்கிப் பேட்டையைச் சேர்ந்த, போர்ச்சுகல் ஆட்சி கால நீதிபதி, தாவூத்கான் என்பவரால் கட்டப்பட்டது. எண்பது அடி உயரத்தில் நிற்கும் இந்த மனோரா ஆரம்ப காலத்தில் உச்சியில் ஓட்டு கூரையில் மூடப்பட்டிருந்ததால் இதற்கு ஓட்டு மனோரா என்று பெயர் வந்தது.

***அற்புதத்தின் அற்புதம் :***

ஒளிபொருந்திய ஐந்து மனோராக்களுக்கும், ஆன்மீக ஆட்சிக்கும் சொந்தக்காரரான நாகூர் ஆண்டகை தம் வாழுநாளில் புரிந்த அற்புதங்கள் எண்ணற்றவை.

மனுகுலத்துக்கு உதவும் பொருட்டு சையிது முகம்மது யூசுப் என்கின்ற தன் ஆத்மகுமாரரையும், அவரது சந்ததிகளிலிருந்து காலம் உள்ளவரை தோன்றி வரும் இறைநேசச் செல்வர்களையும் அவர்கள் உருவாக்கிய அற்புதம் ஆன்மீக வரலாற்றில் வித்தியாசமான ஒன்றாகும்.

**லாகூர் நகரம்:**

இஸ்லாமியர்களின் ஆட்சி இந்தியாவில் துவங்கிய காலத்திலிருந்தே பாரசீக கலாச்சாரத்தின் எல்லா அம்சங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்ட லாகூர் நகரில் கஜல்களும், நடன சபாக்களும் அதிகரித்து வந்தன.

இந்தியாவை பாரசீகத்தோடும், அரபி மொழியோடும், இணைக்கும் பாலமாக உருவாகிக் கொண்டிருந்த இந்துஸ்தானி லாகூரில் கவிஞர்கள் பலரை ஈன்று தந்தது.

**முப்தி நூருத்தீன் :**

ஒருநாள் இஷாதொழுகைக்குப் பின்னர் அண்ணல் தங்கியிருந்த மாபெரும் மாளிகைக்கு லாகூரின் ஆளுநர் முப்தி நூருத்தீன் தன் மனைவியுடன் வந்து புகுந்தார்.அண்ணல் ஷாகுல் ஹமீது நாயகம் குழந்தை வரம் தேடிவந்த அவருக்கு அருள் புரிந்தார்கள்.

***என்னிடம் அனுப்புங்கள் :***

அண்ணலர் தொடர்ந்து “இறைதூதர் ஈஸா (அலை) அவர்கள் பிறந்த மூன்றாம் நாளில் பேசி தனது அன்னையின் புனிதத்தை நிரூபித்தது போல அன்னை ஜொஹ்ராவுக்குப் பிறக்கும் முதல் மைந்தர் தனது ஏழாவது வயதிலே அவரது ஆன்மாவின் தந்தை ஆகிய

எனது புனிதத்தைப் பற்றி பேசுவார்! அப்போது அவரை என்னிடம் அனுப்பி விடுங்கள். அவருக்கு பின் பிறக்கும் குழந்தைகள் உங்களுடைய சந்ததியாவார்கள்!" என்றார்கள் பின் அண்ணலர் மவுனத்தில் ஆழ்ந்தனர்.

அண்ணலர் திருமுகத்தை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த முப்தி நூருத்தீன் அவர்களும், கலீஃபாக்கள் நால்வரும் அண்ணலரின் முகத்தில் பேரொளி யொன்று தோன்றி பிரகாசிப்பதை கவனித்தார்கள்.

கூடியிருந்தவர்களின் திறந்த கண்ணெதிரிலேயே துரிய காட்சிகள் தோன்றலாயின. எங்கும் கஸ்தூரி மணம் பரவியது. அண்ணலரின் புருவ மத்தியினூடே ஒளியொன்று புறப்பட்டு லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி என்று கோலம் கொண்டது.

**மாணிக்க குழந்தை :**

அனைவரின் கண்ணெதிரிலும் அந்த சொற்றொடர் மாணிக்கக் குழந்தையின் தோற்றங்க கொள்ளத் துவங்கியது. துரிதமாய் நடக்கும் அவ்வருங் காட்சியைக் கண்ட அனைவரும் நெஞ்சம் துணுக்குற பேராச்சரியத்திலே மூழ்கியிருந்தனர்.

மவுன சாகரக் கடலென அந்த மாளிகை மாறியது. அண்ணலர் திடீரென கண் மலர்ந்தார்கள். அந்த கண்களைக் கண்டு அவற்றினூடேயிருந்து வெளிப்படும் தவச்சுடரை தாங்கிட ஒண்ணாது யாவரும் பிரமிப்பிலாழ்ந்தார்கள். அன்னை ஜொஹ்ராவின் நெற்றி மையத்தை அண்ணலரின் பார்வை கூர்ந்து நோக்கியது.

இமைப்பொழுது நகருமுன்னர் அண்ணலரின் நெற்றியிலிருந்த ஒரு முத்தொளிவு நாவிலிருந்து ஹூம் என்ற பேரோசையோடு அன்னை ஜொஹ்ராவின் புருவ மையத்தை தாக்கி அதனூடேப் புகுந்து மறைந்தது.

சில கணங்கள் அமைதியாய் கழிந்தது. பின்னர் யாவும் சமநிலைக்கு வந்தன. மாளிகையும், மண்டபமும், மாபெரும் மர்மத்திலிருந்து விடுபட்டு லாகூரின் சகஜ வாழ்க்கையோடு ஒன்றியது.

சிந்து நதியின் தென்றல் புகுந்து திரைச் சீலைகளை தாலாட்டியது. தூரத்து மாளிகை மாடங்களிலிருந்து சலங்கைகளின் ஓசை சன்னமாக ஒலிக்கத் துவங்கியது.

## அதிசயித்த கலீஃபாக்கள் :

அண்ணலர் அப்துல் காதிர் நாயகம் கண்திறந்து அமைதியாய் யாவரையும் பார்த்தார்கள். நூருத்தீன் முப்தி அவர்கள் முகத்திலே விவரிக்க ஒண்ணாத நன்றியுணர்வு பரவிக் கிடந்தது. அண்ணலரின் எண்ணிலா அற்புதங்களை கண்ணாரக் கண்டிருந்தும் கூட கலீஃபாக்கள் அப்பேரதிசயத்தை, அற்புதத்தைக் கண்டு மலைத்துப் போயினர்.

ஏழாண்டுகளுக்குப் பின்னர் மரத்தை தேடிவந்த மாங்கனியைப் போல தந்தை காதிர் ஒலி ஆண்டவர்களை மைந்தர் யூசுப் ஒலி நாயகம் தேடி அடைந்த வரலாறு இனிமையானது.

## மஸ்ஜிதுந் நபவி :

அஸ்ஸலாமு அலைக்கும் என்னும் முகமன் ஒலியின் அலைகள் பெருகி நிறம், இனம், மொழி முதலிய நானாவிதமான பேதங்களையும்

விரட்டியடித்து மஸ்ஜிதுந் நபவியின் முற்றத்தையும், தாழ்வாரங்களையும், நடுமண்டபத்தையும் உலக சமுதாயத்தின் சகோதரத்துவ சாந்தி சமுத்திரமாக மாற்றிக் கொண்டிருந்தது.

## குளோபர் விளக்குகள் :

குளோபர் விளக்குகளின் பிரகாசமான வெளிச்சத்தில் மஸ்ஜிதின் நெடிதுயர்ந்து நின்ற மனோராக்கள் பிரபஞ்சம் முழுமைக்கும் விடப்படுகின்ற சவால் போல தோற்றமளித்தன. நகரைச்சுற்றி அரண் போல் அமைந்த பசுமையான குன்றுகளின் மீது புறப்பட்டு பேரீச்சைத் தோப்புகளில் புகுந்து மிதந்து வந்த பூங்காற்று பள்ளிவாசலின் கதவுகளையும் கிராதிகளையும் தீண்டி சேவித்துக் கொண்டிருந்தது.

## *எட்டு வயது சிருவர் :*

அந்த ஜனரஞ்சகமான பள்ளிவாசலின் ஒரு தூணருகில் எட்டு வயதே நிறைந்த இளம் பாலகரொருவர் நெடுநேரமாக நின்று தொழுது கொண்டிருந்தார். மஹ்ரிப் வக்திலிருந்தே நடுநிசிப்போது வரை விடாப் பிடியாக வணக்கத்தில் ஈடுப்பட்டிருந்த அச்சிறுவரை சிலர் அதிசயத்தோடு பார்க்கத் தவறவில்லை. நடுநிசிப்போதும் கழிந்தது.

மஸ்ஜிதுந் நபவியின் மகிமைமிக்க நடுமண்டபத்தில் மூமின்களின் தாய் ஆயிஷா (ரலி) பிராட்டியார் பெயரால் அமைந்த தூணருகில் நின்று தொழும் அந்த பாலகரை தூரத்திலிருந்து கவனித்தவாறு நேரெதிரே திறந்திருந்த பாபுஜிப்ரயீல் என்னும் வாசலில் வந்து நின்றார்கள், சங்கை மிக்க ஹஜ்ரத் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகமவர்கள்.

***தவசீல மகான் :***

போர்த்திய சுத்தப் பசுமையான கம்பளி போர்வையோடும், பரந்த தாடியோடும், அதன் நடுவில் பௌர்ணமிப் பிரகாசமாய் பிரகாசிக்கும் நிலவு போன்ற வடிவமான அழகு முகத்தோடும், பாதுஷா நாயகமவர்கள் மண்டபத்தினுள் மெல்ல நுழைந்தபோது விதானத்தில் தொங்கிக் கொண்டிருந்த குளோபர் விளக்குகள் ஆச்சர்யத்தோடு குனிந்து அந்த தவசீல மகானை உற்று நோக்கின.

பாலகரின் அருகில் நெருங்கி அரவம் உண்டாக்காமல் நின்றார்கள் அந்த மகான். தொழுகையை முடித்துவிட்டு கண்மூடி அமர்ந்திருந்த பாலகரின் இமைகளினூடே கண்ணீர் பெருகி கன்னங்களில் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவரது தூய உதடுகளின் முணுமுணுப்பு பாதுஷா நாயகத்தின் காதுகளில் சன்னமாக விழுந்தது.

“இறைவா! என் தந்தையாகிய அப்துல் காதிரு ஷாகுல் ஹமீது நாயகம் அவர்களிடம் என்னை கொண்டு போய் சேர்த்துவிட்டால் ஆயிரம் ரகஅத் நஃபில் தொழுகையைத் தொழுகிறேன் என்ற என் நேர்ச்சையை இப்போது நான் பூரணமாக நிறைவேற்றி முடித்து விட்டேன். இதை நீ ஒப்புக்கொண்டு என்னை பொருந்தி கொள்வாயாக!”

***பொங்கும் புனல் :***

நீண்ட பெருமூச்சு ஒன்று அவ்விளம் பாலகரின் இதயத்திலிருந்து பிறந்தது. பாலகர் ஸையிது முஹம்மது யூசுபின் அருகில் அரவம் எழுப்பாது நின்றிருந்த சங்கை மிக்க பாதுஷா நாயகத்தின் உள்ளத்தில்

இனம் புரியாத பாச உணர்வுகள் ஜம்ஜம் புனலூற்றைப் போலப் பொங்கிப் பிரவகித்தது.

பெருமானார் (ஸல்) அவர்களின் திருவிடத்தை நோக்கித் திரும்பி மும்முறை “ஸலாம்” கூறிவிட்டு நிமிர்ந்தபோது தன்னருகே அரவமெழுப்பாது நின்றுகொண்டிருக்கும் தந்தை பாதுஷா நாயகத்தை கண்டு திடுக்கிட்டார், மைந்தர்.

கருணைக் கண்கள் குளிர்ந்து கண்ணீர் விழிகளில் அரும்ப நின்றிருந்த தந்தை, மைந்தரை நோக்கி “ஸையித்யூசுப்” என்று விளித்து இரு கைகளையும் விரித்தார்கள். பால்குடி மாறாத பாலகனைப் போல தந்தையின் கரங்களில் தாவி நெஞ்சில் அணைத்தார்கள் மைந்தர்.

## அருளொளி முத்து :

பாதுஷாநாயகம் அவர்கள் தம் கரங்களில் இணைந்து வந்த அந்த அன்பு மைந்தரை, ஸையித் முஹம்மது யூசுப் என்னும் அருளொளி முத்தின் முகத்தைப் பரவசத்துடன் பார்த்தவாறு நடந்தார்கள். “பாவா! என்ன பாவா என் முகத்தையே பார்க்கிறீர்கள்?” என்றார் மைந்தர்.

“மைந்தரே! இறைவன் எனக்களித்த விருதுகளிலெல்லாம் சிறந்த விருது நீரே யாவீர்! என் தவத்திற்கு கிடைத்த பரிசுகளில் சிறந்த நற்பரிசும் உமது தோற்றமேயாகும்! உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் சிற்றின்பத்தின் சாரமாகவே பிறக்கிறது. எனது அருமை மைந்தரே! நீரோ பேரின்பத்தில் விளைந்தீர்; இறைவனின் அற்புதமான இரகசியமாக இருக்கிறீர்” என்றார்கள் பாதுஷா நாயகமவர்கள்.

***தர்பார் பராமரிப்பு:***

இப்படி உருவான அந்த மாபெரும் ஞானி நாகூர் யூசுஃப் தாதா நாயகத்தின் சந்ததியினர்தான் இன்றும் நாகூரிலே எஜமான் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகத்தின் தர்பாரை பராமரித்து வருகிறார்கள். அந்த சந்ததியிலிருந்து காலங்கள் தோறும் இறை ஆட்சியாளரான ஒரு குத்பு, இறைநேசரான ஒரு ஒலி, இறை காதலரான ஒரு மஜ்தூப் எக்காலத்திலும் இருந்து வருகிறார்கள்.

**மும்மதமும் சம்மதம் :**

இங்கு எம்மதமும் சம்மதம் என்பது உண்மை. தர்காவிலுள்ள அடையாளங்களே மும்மதமும் சம்மதத்தை முழங்குகின்றன. பெரிய மனோராவின் அருகிலுள்ள மணிமேடையிலிருந்து காலையிலும் மாலையிலும் எழும்நாதத்தில் முஸ்லிம்களின் நகராஓசையும், இந்துக்களின் மேளமும், கிறிஸ்துவர்களின் வெண்கல மணியோசையும் கலந்திருக்கிறது.

தர்காவிலிருந்து எழுந்துவரும் நாதஒலியில் மட்டுமல்ல மண்ணறையிலிருந்து வியாபிக்கும் ஜோதி ஒளியிலும் மதங்களின் ஒருமைப்பாட்டை காணமுடியும். மண்ணறை முகப்பு, பள்ளிவாசல் முகப்பை போன்று அமைந்திருப்பது முஸ்லிம்களின் அடையாளமாகும்.

வாசலில் விளக்குகளத் தாங்கி நிற்கும் விளக்குத் தண்டு கிராஸ் என்னும் சிலுவை அமைப்புடன் கிறிஸ்துவமத சின்னமாக விளங்குகிறது. வாசலை சுற்றி ஒளிவீசும் அகல்சிட்டி விளக்கு வரிசை இந்து மக்களின் கலாச்சாரப் பிரதிபலிப்பாகும்.

**இந்து சம்பிரதாயம் :**

இந்து கோயில்களின் சம்பிரதாயம் போல் தேங்காய் உடைக்கப்படுகிறது. உடைந்த தேங்காயின் உள்ளிருக்கும் வெண்மை உடைத்தவனின் பக்தி உள்ள உளத்தூய்மையைப் பரைசாற்றுகிறது.

**முஸ்லிம் கிறிஸ்துவர் அடையாளம் :**

ஏற்றப்படும் ஊதுபத்திகள் முஸ்லிம்களின் மரபாகும். இது ஏற்றுபவன் தன்னிலிருந்து வாசத்தை வெளிப்படுத்தி விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகும். புகைக்கப்படும் சாம்பிராணி கிறிஸ்துவர்களின் அடையாளம். எக்காலும் வாசத்துடன் வாழ்ந்து என்னை கர்த்தருக்கு அர்ப்பணிப்பேன் என்பதாகும் இதன் பொருள்.

**அமிர்த சங்சீவி :**

மூன்று வாசல்களிலும் வழங்கப்படும் சந்தணம் முஸ்லிம்களுக்கு, பூ கிறிஸ்துவ மக்களுக்கு திருநீர் இந்துப் பெருங்குடி மக்களுக்கு. அம்மா வாசலின் வெற்றிலை வியாதிக்கு மருந்து, அகல் விளக்குகளில் எடுத்த எண்ணெய் உள்ளுக்குள் அருந்தவும் உடலுக்கு பூசவும் நோய் நிவாரணி, தாதா வாசலில் தொங்கும் சங்கிலியைக் கழுவியத் தண்ணீர் ஆயுளை நீட்டுவிக்கும் அமிர்த சங்சீவி.

**கருணானந்த பூபதிகள் :**

இன்னோரன்ன அற்புதங்கள் நிறைந்த ஆண்டவர்களின் தர்காவைப் பாடிப்புகழ்ந்து திருவாரூரில் வாழ்ந்த மகான் கருணானந்த பூபதி அவர்கள் பாடியப்பாடல் உள்ளம் தெளிவிக்கும் நல்ல மருந்து ஆகும்,

நமனை வெருட்ட மருந்தொன்று விற்குது

நாகூர் தர்காவிலே - அன்பு

நாணயம் கொண்டு சென்றால் பெறலாம் - குரு

நாதர் பதப்பூவிலே.

இந்தப் பிணிக்குண்டு இந்தப் பிணிக்கில்லை

என்று சொல்லா மருந்து - அது

இந்நேரம் விற்றிடும் இந்நேரம் விற்காது - என்று

சொல்லப்படா மருந்து

தாத்து ஜபரூத்து லாகூத்து மக்காமை

தரிசிக்கும் மாமருந்து - அது

தன்னையும் காட்டித் தன்தலைவனையும் காட்டிடும்

தத்துவ மகா மருந்து.

மதபேதமின்றி எமனை விரட்டி நித்தியஜீவித இறைநேச வாழ்க்கையை மக்களுக்கு அளிக்கும் ஆண்டவர்களின் தர்பாரை அணுகும் ஆன்மாக்கள் முக்தியடைகின்றன.

அனைத்து சமயங்களை சார்ந்த உயிருள்ள மனிதர்களுக்குமட்டுமல்ல, உயிர்துறந்த மனித சடலங்களும் அவர்களின் புனித தர்கா ஷரீஃபில் அடைக்கலம் பெறுகிறது என்பது அதிசயமான ஒன்றாகும்.

***அருள்பெற்ற சுனாமி சடலங்கள்:***

ஆம்! கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தை

உலுக்கியெடுத்து உருக்கெடுத்த சுனாமி நிகழ்வின்போது நாகூரின் எல்லைகளில் பலியான சுமார் 360 நபர்களின் சடலங்கள் அவை இந்து முஸ்லிம் கிறிஸ்துவ பாரபட்சம் இன்றி தர்கா ஷரீஃபின் புனித இடுகாடாகிய மைதானில் புதைக்கப் பெற்றன.

**தஞ்சம்! தஞ்சம்!**

"யா கௌதனா கௌதல் வரா குத்பல் மஜீது
லி ஷைகனா லி கம்சதீத் துற்கிர் ரஷீது
பஹ்றல் உலூமி வ கன்ஸ இர்ஃபானின் அகீது
யா மஹ்ஜனல் அஸ்ராரி யாஷாஹுல் ஹமீது!!
''எனது எஜமானரே! நாகூராரே!
இவ்வகிலத்தின் உயிர்களை இரட்சிக்கவந்தவர்களே
இறைநாயகர்களாம் குத்புமார்களில் அரிதானவர்களே!
ஞானாந்திகளை ஈடேற்ற வந்த கோமானே!
ஷரிஅத்தின் சமுத்திரம் போலும்,
தன்னையறியும் ஞானத்தின் புதையலைப் போலும்
இரகசியக் கலைகளுக்குப் பொக்கிஷம் போலும்
வந்த மகானே! தஞ்சம்! ஷாஹுல்ஹமீதுநாயகமே!"

என்று பாடினார்கள் நூல் ஆசியரின் பாட்டனாரான ஷெய்கு நாயகம் ஹாஜி குலாம் தஸ்தகீர் நானா சாகிபு (குத்) அவர்கள் புகழனைத்தும் இறைவனுக்குரியது. ஸலாமும் ஸல்வாத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்மீதும் அன்னாரின் கிளையார் கோத்திரத்தார் மற்றும் கூட்டத்தார் பேரிலும் என்றும் உண்டாவதாகுக!

# பேதமில்லா வேதம் நாகூரின் நாதம்

பேதங்கள் உருவாவதெல்லாம் அறியாமையினால் தானே
வேதங்கள் நெறிநின்று வாழ உணராததினால் தானே
வெற்றிகள் பெற்று நாம் வாழ ஒற்றுமை தேவை
இந்து முஸ்லிம் கிருஸ்து இணைந்தே
ஒன்றாய் வாழ்வோமே......ஒன்றாய் வாழ்வோமே

கடவுள் என்றாலும் இறைவன் என்றாலும்
கர்த்தன் என்றாலும் ஒன்றுதான்
வணங்கும் முறையில் தான் வேறுபாடுகள்
வகுத்து வைத்தார்கள் அன்று
நதிகள் கிளையாக பிரிந்து சென்றாலும்
கடலில் ஒன்றாகும் சங்கமம்
வணங்கும் முறையாவும் வேறுஎன்றாலும்
நோக்கம் ஒன்றுதான் எங்கேயும் ..........(பேதங்கள்)

கீதை சொல்வதும் பைபிள் சொல்வதும்
உலக சமநீதி தர்மந்தான்
குர்ஆன் கூறுகின்ற வழியை உணர்ந்தால்
புரியும் இஸ்லாத்தின் மார்க்கம்தான்
எந்த மதத்தையும் இழிவு படுத்தாதே
என்று சொன்னதும் நபிகள்தான்
உனதுவழி உனக்கு எனதுவழி எனக்கு
என்று சொன்னதும் அவர்கள்தான்.....(பேதங்கள்)

இராமர் ஏசு அந்த நபிகள்நாயகம்
சென்றவழி இன்று நடந்தால்
அன்பு இந்துவாய் பணிவு கிருஸ்துவாய்
உண்மை முஸ்லிம் எனவாழலாம்
உலக மாந்தரே உயர்ந்து வாழுங்கள்
உறவை முறித்துக்கொள்ள வேண்டாம்
மூன்று வேதங்கள் கூறும் நன்மைகள்
மறந்து வாழ்வதே பாவமாம்.................(பேதங்கள்)

பாடல் - ஆன்மீக கவிஞர் நாகூர் சாதிக்
பாடியது - ஆன்மீக இசைத் தென்றல்
A. ஜெய்னுலாபிதீன் ஃபைஜி